


**03. 10. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில்** பால்வளத்துறை முக்கிய பங்காற்றுவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2. **உலகளாவிய தேக்க நிலையிலும் நம் நாட்டின்** வளர்ச்சி நிலைத்தன்மையுடன் வலுவாக உள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

3. **ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் 100 மெட்ரிக் டன்** கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும் உள்ளிட்ட 9 அறிவிப்புகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டார்.

4. **தமிழ்நாட்டில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்** முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாநில அமைச்சர் திரு.சேகர்பாபு குறிப்பிட்டுள்ளார்.

5. **அஹமதாபாத்தில் வெஸ்ட்இண்டிஸுக்கு எதிரான** முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் வலுவான நிலையில் உள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**அமித்ஷா**

**கிராமப்புற பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில்** பால்வளத் துறை முக்கிய பங்காற்றுவதாக மத்திய கூட்டுறவு மற்றும் உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ஹரியானா மாநிலம் சபரில் 350 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பால் பண்ணையை இன்று திறந்து வைத்து பேசியஅவர், ஊட்டச்சத்திற்கான வலுவான ஆதாரமாக இத்துறை விளங்குவதோடு, விவசாயிகளின் வாழ்வில் செழிப்பை ஏற்படுத்துவதாக கூறினார்.

கடந்த 11 ஆண்டுகளில் 70 சதவிகித வளர்ச்சியுடன் பால்வளத்துறை சாதனை படைத்திருப்பதாக கூறினார்.

தொடர்ந்து சுதேசி மூலம் தன்னம்பிக்கை என்ற கருப்பொருளில் நடைபெறும் காதி கைவினைஞர் விழாவில் அவர் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார்.

❖❖❖❖❖❖

**நிர்மலா சீதாராமன்**

**வளர்ச்சியடைந்த பாரத இலக்கை** எட்ட, 8 சதவிகித உள்நாட்டு பொருளாதார வளர்ச்சிக்கான அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர், உலகளாவிய தேக்க நிலையிலும் நம் நாட்டின் வளர்ச்சி வலிமையுடனும், ஸ்திரத்தன்மையுடனும் உள்ளதாக கூறினார்.

உள்நாட்டு காரணிகளால் இது சாத்தியமாகி உள்ளதாக கூறியஅவர், புவிசார்ந்த அரசியல் நிலவரங்களால் தற்போதைய தேவைகளை ஈடுசெய்ய, சர்வதேச அளவில் சீர்த்திருத்தங்களின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

தற்சார்பு, வளர்ச்சியடைந்த பாரதம் என்ற பிரதமரின் இரு இலக்குகளை சுட்டிக்காட்டிய அவர், நிதி சீர்த்திருத்தங்கள், மூலதன முதலீடுகளின் தரம், பணவீக்க நெருக்கடிகள் போன்ற சவால்களை எதிர்கொள்ள அரசு உயர் முன்னுரிமை வழங்கி வருவதாக குறிப்பிட்டார்.

பொருளாதார நிபுணர்களையும், கொள்கை வடிவமைப்பாளர்களை இணைக்க இப்பொருளாதார மாநாடு ஒரு சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாக நிர்மரா சீதாராமன் மகிழ்ச்சி தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**மன்சுக் மாண்டவியா**

**சமூக பாதுகாப்பில் சிறந்த** சாதனையாளர்களுக்கான மதிப்புமிக்க சர்வதேச விருது இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சமூகவலைதளப்பதிவில் மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வெளியிட்டுள்ள செய்தியில் நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சமூக நலனை உறுதி செய்வதில் பிதமரின் முயற்சிகளுக்கு இந்த விருது ஒரு சான்று என கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖

**மன் கி பாத்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய** வானொலியில் மனம் திறந்து பேசும் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சி, வளர்ச்சியடைந்த இந்தியா தொலைநோக்கு பார்வைக்கான சக்திவாய்ந்த ஊடகமாக திகழ்கிறது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்நிகழ்ச்சி தொடங்கப்பட்டு 11 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், 100 கோடி நேயர்களை சென்றடைந்துள்ளதாகவும், 34 கோடியே 13 லட்சரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

கோவிட் பெருந்தொற்று காலங்களில் இந்நிகழ்ச்சி நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

**பில்கேட்ஸ்**

**படைப்பாற்றல் திறனில் முன்னோடி நாடாக இந்தியா** திகழ்கிறது என்று மைக்ரோ சா.்.ப்ட் இணை நிறுவனர் பில்கேட்ஸ் தெரிவித்துள்ளார்.

சியாட்டிலில் இந்திய தூதரகம் சார்பிலான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், தென்னாடுகளில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்களின் வாழ்வாதார பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் திறன் இந்தியாவிற்கு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த பாரத பாதையில் இந்தியாவுடன் இணைந்து செயலாற்ற அவர் விருப்பம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**ஜவுளித்துறை**

**ஜவுளித்துறைக்கான உற்பத்தி திறன் சார்ந்த** ஊக்கத்தொகை திட்டத்தின்கீழ் புதிய விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை வரும் டிசம்பர் மாதம் வரை நீட்டித்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

புதிய முதலீட்டாளர்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் வகையில் இந்நடவடிக்கை.

❖❖❖❖❖❖

**எல்.முருகன்**

**விடுதலை போராட்ட வீரர் மா.பொ.** சிவஞானத்தின் நினைவுதினத்தை ஒட்டி தேசத்திற்கு அவர் ஆற்றிய சமூக பணிகளை மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் நினைவுகூர்ந்துள்ளார்.

மொழிவாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட காலங்களில் மாநிலத்திற்காக அவரது பங்களிப்பை போற்றியுள்ளார்.

❖❖❖❖❖❖

**சரக்கு சேவை வரி**

**சரக்கு சேவை வரி சீர்த்திருத்தங்கள் நாட்டின்** மறைமுக வரி கட்டமைப்பை எளிதாக்கியுள்ளது.

புதிய வரி கட்டமைப்பின் கீழ் இரண்டடுக்கு வரி முறை மட்டுமே நடைமுறைபடுத்தப்பட்டுள்ள நிலையில், மின் சாதன பொருட்கள் மற்றும் வாகனங்களுக்கான சரக்கு சேவை வரி குறைப்பு பொதுமக்களுக்கு பெருமளவில் நலம் பயப்பதாக நாமக்கல் மாவட்ட மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் சங்கத்தலைவர் திரு. சதீஷ்குமார் தெரிவிக்கையில்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**முதலமைச்சர்**

**ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் ஒருகோடி** ரூபாய் மதிப்பில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரத்தில் இன்று பல்வேறு துறை சார்பில் 736 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல்நாட்டி, முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கிவைத்து பேசியஅவர், ராமநாதபுரம் நகராட்சியில் உள்ள 4 வழித்தட நெடுஞ்சாலை 30 கோடி ரூபாய் செலவில் 6 வழி சாலையாக தரம் உயர்த்தப்படும என்றார்.

அங்குள்ள பழைய பேருந்து நிலையம் நவீன வணிக வளாகமாக மாற்றியமைக்கப்படும், அரசு மகளிர் கல்லூரியில் புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படுவதோடு 10 கோடி ரூபாய் செலவில் புதிய வகுப்பறை கட்டடங்கள் கட்டப்படும் உள்ளிட்ட 9 புதிய அறிவிப்புகளை முதலமைச்சர் இன்று வெளியிட்டார்.

**.. வாய்ஸ் ..**

இந்நிகழ்ச்சியில் 50 ஆயிரத்து 752 பயனாளிகளுக்கு 427 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

பின்னர் சிவகங்கை மாவட்டம் கீழடியில் முதலமைச்சர் அகழாய்வு நடைபெற்ற இடங்களை பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை** எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையில இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எதிர்கட்சிகள் தேவையின்றி அவதூறு பரப்பி வருவதாக தெரிவித்தார்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் கந்தசஷ்டி பெருவிழாவிற்கான பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

**ரகுபதி**

**நாட்டிலேயே உயர்கல்வி பயிலும் மாணாக்கரின்** எண்ணிக்கை தமிழகத்தில் அதிகளவில் காணப்படுவதாக மாநில இயற்கை வளங்கள் துறை அமைச்சர் திரு. ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் 8-வது புத்தகத்திருவிழாவை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், கல்வித்துறைக்கு தமிழக அரசு அதிமுக்கியத்துவம் அளித்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. மெய்யநாதன் வரும் 12-ம் தேதிவரை நடைபெறவுள்ள இப்புத்தக திருவிழாவை மாணாக்கர் பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖

**மதிவேந்தன்**

**தமிழகம் முழுவதும் மாணாக்கர் விடுதிகளில்** அனைத்து வசதிகளும் மேம்படுத்தப்பட்டு வருவதாக மாநில ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் சமூகநீதி விடுதி கட்டடத்தை இன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தபின் செய்தியாளர்களிடம் பேசியஅவர், தற்போதைய நவீன வசதிகளுக்கு ஏற்ப அனைத்து வசதிகளையும் உள்ளடக்கி விடுதிகள் கட்டப்படுவதாகவும், மாணவ மாணவிகள் தங்கி படிக்க தனித்தனியே அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

விடுதிகளில் காணப்படும் குறைகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

**சேலம் வாய்ஸ்**

**பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அறிவுறுத்தலின்** படி பண்டிகை காலங்களில் சுதேசி பொருட்களை வாங்குவதன் மூலம் உள்ளூர் வியாபாரிகள் பயன்பெறுவார்கள் என சேலம் மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**கோவில்**

**108 திவ்ய தேசங்களில் 39-வது திவ்யதேசமான** சீர்காழி திருவெள்ள குளம் அண்ணன்பெருமாள் திருக்கோவில் தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்வான தெற்போற்சவம் நாளைமறுநாள் நடைபெறும்

..

**ஈரோடு கோட்டை கஸ்தூரி அரங்கநாத பெருமாள்** கோவில் புரட்டாசி மாத தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

நாளை மாலை குதிரை வாகனத்தில் திருவீதி உலாவும், நாளைமறுநாள் சேஷவாகனத்தில் தெப்ப உற்சவமும் நடைபெறும்.

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**அஹமதாபாத்தில் வெஸ்ட்இண்டிஸுக்கு எதிரான** முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 4 விக்கெட் இழப்பிற்கு 313 ரன் எடுத்திருந்தது.

வெஸ்ட்இண்டிஸ் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 162

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**போர்ச்சுக்கல் பிராகாவில் நடைபெறும்** சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் சுமித்நாகல் - குரோஷியாவின் லுக்கா மெக்ரூட்டை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**அஹமதாபாத்தில் வெஸ்ட்இண்டிஸுக்கு எதிரான** முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டத்தில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் .......... விக்கெட் இழப்பிற்கு .......... ரன் எடுத்திருந்தது.

வெஸ்ட்இண்டிஸ் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 162